தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 9, திருவள்ளுவர் ஆண்டு—2048

2017 ஜூன் 23, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.”

ஒரு தொழிலைச் செய்து முடிப்பதற்கேற்ற கருவிகளோடு, காலத்தையும் அறிந்து செயல்பட்டால், வெற்றி பெறுவதற்கு முடியாத கடினமான செயல் என்று எதுவும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

மான்கள் சரணாலயம்

***9876—திரு. ஆர். சுந்தரராஜ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் சாலிகுளம் மேற்குப் பகுதியிலுள்ள வனப் பகுதியில் மான்கள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் சாலிகுளம் மேற்குப் பகுதியிலுள்ள வனப் பகுதியில் மான்கள் சரணாலயம் அமைக்க முடியுமா என்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் இங்கே வினாவாக எழுப்பியிருக்கிறார்கள். பேரவையின் அனுமதியோடு இங்கே திருத்திய விடையை அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் சாலிகுளம் மேற்குப் பகுதியிலுள்ள வனப் பகுதியில் மான்கள் சரணாலயம் அமைப்பதற்கு ஏதுவான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதால், சரணாலயம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ் அவர்கள்.

திரு. ஆர். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் பொது வாழ்வுக்கு வழங்கப்பட்ட அருட்பெரும் கொடை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்பதற்கேற்ப, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சிறிதும் தன்னலம் கருதாத தாயாகவும், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவியாகவும், பூமித்தாய் பெற்ற திருமகளாகவும் விளங்கியவர். உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களின் இதயத் துடிப்பாக, மக்கள் நலன் காக்கும் திட்டங்கள் தந்த மகராசியாக, அனைவருக்கும் அன்னமிட்ட அன்னபூரணியாக, நமக்கு எல்லாம் முகவரி தந்த மூகாம்பிகையாக வாழ்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மக்கள் போற்றும் மகத்தான அம்மா ஆட்சியை தலைமை தாங்கி வழி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் சாலிகுளம் மேற்குப் பகுதி காப்புக் காடாக 1980 ஆம் ஆண்டு

2017 ஜூன் 23]

முதல் இருந்து வருகின்றது. சமீபகாலமாக ஒட்டப்பிடாரம் பகுதியிலே மான்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கின்றது என்பதை வனத் துறையின்மூலமாக நாம் கண்டறிகின்றோம். கீழமுடிமான், கீழமங்கலம், வெள்ளாரம், எப்போதும்வென்றான் ஆகிய பகுதிகளிலே சுமார் 300-க்கும் மேற்பட்ட மான்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தற்போது வனச் சட்டம் கடுமையாக உள்ளது. வனத்தில் குடிநீர்ப் பிரச்சினை இருப்பதால் அங்கேயுள்ள மான்கள் எல்லாம் தண்ணீரைத் தேடி வெளியே வருகின்ற நிலை ஏற்படுகிறது. அந்த சமயத்தில் வன விலங்குகளுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்படுகிறது. இதனை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, வருங்காலங்களில் மான் போன்ற விலங்குகளைக் காப்பாற்ற அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்ட தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வனச் சரகம், ஒட்டப்பிடாரம் வட்டம் மற்றும் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாலிகுளம் பகுதியில் சாலிகுளம் கிழக்கு மற்றும் சாலிகுளம் மேற்கு என்ற இரண்டு ஒதுக்குக் காடுகள் உள்ளன. இதன் பரப்பளவு முறையே 122.765 ஹெக்டேர் மற்றும் 962.26 ஹெக்டேர் ஆக மொத்தம் 1,085.05 ஹெக்டேர் ஆகும்.*

முற்பகல் 10-05

இங்கு புள்ளி மான்கள், முயல், கீரி, நரி, மயில், பாம்பு போன்ற இனங்களும் மற்றும் சில வன உயிரினங்களும் உள்ளன. இக்காப்புக் காட்டிற்குள் நிரந்தர தண்ணீர் ஆதாரம் எதுவும் கிடையாது என்பதால், மழைக் காலங்களில் துறையின்மூலம் கட்டப்பட்ட தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் மட்டுமே வன உயிரினங்களுக்கு நீராதாரமாக உள்ளன. இக்காப்புக் காட்டினைச் சுற்றி குடியிருப்புப் பகுதிகளும், மானாவாரி நிலங்களும், அதனையடுத்து விவசாய நிலங்களும் உள்ளதால் சாலிகுளம் காப்புக் காட்டினை சரணாலயமாக அறிவிக்கும்பட்சத்தில், மான்களின் பாதுகாப்பு கருதி, குடியிருப்புகள் மற்றும் இன்ன

பிற செயல்பாடுகள் அதாவது, சாலை வசதி, கட்டுமான வேலைகள், மின் கம்பங்கள் நடுதல் போன்றவற்றிற்கு கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இக்காப்புக் காட்டில், வன உயிரினங்களின் எண்ணிக்கையோ அல்லது அழிந்துவரும் விலங்கினமோ, தாவர இனமோ அல்லது சுற்றுச்சூழலுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகவோ அப்பகுதி அமையப் பெறாததால், பிரிவு 26 (a) வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972-ன்படி சாலிகுளம் காப்புக் காட்டினை தற்போது சரணாலயமாக அறிவிக்க இயலாத நிலை உள்ளது என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் அங்கே நிறைய மான்கள் இருப்பதாகவும் அவை தண்ணீர் தேடி அலைவதால் துன்பப்படுவதாகவும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னது, நேற்றையதினம் சம்பந்தப்பட்ட வன அதிகாரிகள் அங்கிருந்து கொடுத்த தகவல். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துகள் சரியாக இருப்பின், மறுபடியும் அதனை ஆய்வு செய்து, அதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்த அரசு முற்படும். ஆனாலும்கூட, ஒரு சரணாலயம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அங்கேயிருக்கின்ற குடியிருப்புகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாமல், சாலை வசதி, கட்டுமான வேலைகள், மின் கம்பங்கள் நடுதல் போன்ற பணிகளுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல், காடுகளிலே இயற்கையாக அந்த விலங்கினங்கள் சுற்றித் திரிந்தால்தான் சரியாக இருக்கும். அங்கேயிருக்கின்ற குடியிருப்புப் பகுதிகளில் அனைத்து வசதிகளும் இருப்பதனால், இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் சரணாலயம் அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. இருந்தாலும், எதிர்காலத்தில் சரணாலயம் அமைக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகும் என்று சொன்னால், அதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே எடுப்பதற்கு பரிசீலிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ் அவர்கள்.*

திரு. ஆர். சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலிகுளம் மேற்குப் பகுதி, கிழக்குப் பகுதி என*

2017 ஜூன் 23]

இரண்டு பகுதிகளாக இருக்கின்ற அந்தக் காப்புக் காட்டுப் பகுதியிலே, மேற்குப் பகுதியிலே புதர் செடிகள் மட்டும்தான் அதிக அளவிலே இருக்கின்றன. அங்கே சுற்றுச் சுவருக்குப் பதிலாக, சுற்று வட்டாரங்களில் பனை மரங்களை நட வேண்டும். அதேபோல், வல்லநாட்டிலே மான்கள் அதிகமாக உள்ளன. தமிழ்நாட்டில் இருக்கின்ற 4 சரணாலயங்களிலே வல்லநாடு ஒரு சரணாலயமாகும். அங்கே மான்களுக்கு அதிகமான குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பதால் மான்கள் அடிக்கடி வெளியே வருகின்றன. ஆகவே, அதிகமான குடிநீர்த் தேவைக்கு, நீர்த்தேக்கக் கசிவுநீர்க் குட்டைகள் போன்ற பண்ணைக் குட்டைகளையும், மான்களுடைய மேய்ச்சலுக்காக புல் தரைகளையும் அங்கே அமைத்துக் கொடுக்க முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலங்கினங்களுக்கும், மனிதர்களுக்கும் குடிதண்ணீர் பிரச்சினை வரக்கூடாது என்பதிலே மாறுபட்ட கருத்துகள் யாருக்கும் கிடையாது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விலங்குகளுக்குச் சரியான பராமரிப்பு வழங்க வேண்டும் என்று ஏற்கெனவே உத்தரவிட்டிருப்பது அனைவருக்கும் தெரியும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலே, மான்கள் தண்ணீர் குடிப்பதற்கு கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள் எல்லாம் கட்ட வேண்டும், கட்ட முடிந்தால் நல்லது என்று சொல்லியிருக்கின்றார். ஏற்கெனவே நான் சொன்ன பதிலைப் போல, மறுபடியும் வன அதிகாரிகளை அங்கே அனுப்பி, நேரடியாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களோடு தொடர்பு கொண்டு, அவர் குறிப்பிட்டுச் சொன்ன அந்த இடங்களில் அதுபோன்ற வாய்ப்புகள் அமையுமானால் நிச்சயமாக அந்த மான்களுக்காக கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள் ஆகியவை நிதிநிலை ஆதாரத்தைப் பொறுத்துக் கட்டப்படும், கட்டுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2017 ஜூன் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.

முற்பகல் 10-10

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகள் அமைக்கின்றபோது ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்தை இணைக்கின்ற சாலைகளை அமைப்பதற்கும், புதிய சாலைகளை அமைப்பதற்கும் வனச் சட்டம் அனுமதி கொடுப்பது கடினமாக இருப்பது ஒருபுறம் இருக்க, கடந்த 40, 50 ஆண்டுக் காலமாக ஏற்கெனவே பராமரிக்கப்பட்டு வந்த பல கிராமங்களை இணைக்கக்கூடிய சாலைகளைக்கூட வனத் துறையைச் சார்ந்தவை என்று குறிப்பிட்டு அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். குறிப்பாக, என்னுடைய திருப்பத்தூர் தொகுதியில் ஏரியூர் முதல் இ.வளையப்பட்டி, அதேபோல், கொத்தமங்கலம் முதல் நெடுங்குடி, ஓ.சிறுவயல் முதல் ஆவுடபொய்கை சாலை, எஸ்.வேலங்குடி முதல் மகிபாலன்பட்டி வரை உள்ள சாலை ஆகியவற்றை கடந்த 40, 50 ஆண்டுக் காலமாகக் கற்களைப் பரப்பி, பிறகு தார்ச் சாலைகளாக நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக பராமரிக்கப்பட்டு வந்தன. ஆனால், இப்பொழுது வனச்சட்டம் இடம் கொடுக்கவில்லை என்பதால் அந்தச் சாலைகளைப் புதுப்பிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. டெண்டர்கள் விடப்பட்டு, கற்கள் பரப்பப்பட்ட நிலையில், புதிதாகச் சாலைகள் அமைப்பதற்கு வனச் சட்டம் இடம் தரவில்லையென்றாலும், 50 ஆண்டுக் காலமாக நடைமுறையில் இருந்து வந்த சாலைகளை, அந்தச் சட்டம் தடுப்பதற்கான வழிவகைகளைக் களைந்து, அவற்றைப் புதுப்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பல திருக்கோயில்கள் மலைமேல் அமைந்திருக்கின்றன. காலப்போக்கில் அதற்கான சாலைகளிலும் வனச் சட்டம் குறுக்கிடக்கூடும். கொடைக்கானல், குற்றாலம், ஊட்டி போன்ற பல சுற்றுலாத் தலங்கள், மலைப் பகுதிகளில் அமைந்திருக்கின்றன. ஆகவே, இவற்றுக்கெல்லாம் ஒரு தீர்வு காணுகின்ற வகையில், இதுகுறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூன் 23]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியகருப்பன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, காப்புக்காடு பகுதிகளில் சாலைகள் அமைப்பதற்கு, வனத் துறையில் கடுமையான சட்டம் இருப்பது உண்மைதான். ஆனாலும், உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற கொடைக்கானல் போன்ற பகுதிகளிலும், மற்ற இடங்களிலும் தேவையான இடங்களில் சாலைகள் இருக்கின்றன. விலங்கினங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதால், வனச் சட்டத்தைக் காரணமாகக் காட்டி சாலைகள் போடப்படாமல், விலங்கினங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். எனவே, அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளின் விவரங்களை அவரது பகுதியில் இருக்கின்ற D.F.O. போன்ற அதிகாரிகளிடம் கோரிக்கையாக வைத்தால், அவற்றை அவர்கள் பார்வையிடச் செய்து, வாய்ப்புகள், வசதிகள் இருந்தால் உறுப்பினர் சொன்ன பகுதிகளில் சாலைகளை அமைக்க நிதியாதாரத்தை வைத்து பரிசீலனை செய்யப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு. மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

ஹாக்கி மைதானம்

*12740—திரு. அ. ராமு:

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த ஹாக்கி மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*